செய்தி வெளியீடு எண். 26/2016        நாள் : 13.06.2016

## விழுப்புரம் மாவட்டத்தில் 1425ம் பசலி ஆண்டிற்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி ) 3 வட்டத்திலும் நாளை 14.06.2016 நடைபெற உள்ள குறுவட்டங்கள்.

## மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு.

******

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை, திண்டிவனம், சங்கராபுரம் ஆகிய 3 வட்டத்திலும் வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) அந்தந்த வட்டாட்சியர் அலுவலகத்தில் தினமும் காலை 10.00 வருவாய்த் தீர்வாயம் நடைபெற உள்ளது.

திண்டிவனம் வட்டாட்சியர் அலுவலகத்தில் சார் ஆட்சியர் திரு.பி.என்.ஸ்ரீதர்,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நாளை 14.06.2016 நடைபெற உள்ளது. திண்டிவனம் குறுவட்டத்தைச் சேர்ந்த சிங்கனூர், தென்களவாய், தென்பசியார், அவணம்பட்டு, கீழ்எடையாளம், அன்னம்புத்தூர், வரகுபட்டு, வேங்கை, கீழ்பேரடிக்குப்பம், கீழ்சித்தாமூர், கட்டளை, ஜானகிபேட்டை, எண்டியூர், குருவம்மாபேட்டை, மொளசூர் ஆகிய கிராமங்கள்.

உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் திருக்கோவிலூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.எஸ்.செந்தாமரை அவர்கள் தலைமையில் நாளை 14.06.2016 நடைபெற உள்ளது. திருநாவலூர் குறுவட்டத்தைச் சேர்ந்த பெரும்பாக்கம், சேந்தமங்கலம், வண்டிப்பாளையம், களத்தூர், இருந்தை, கூவாகம், கொரட்டூர், கிழக்குமருதூர், சிவாப்பட்டினம், சிறுத்தனூர், மடப்பட்டு ஆகிய கிராமங்கள்.

சங்கராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உதவி ஆணையர் (கலால்) திரு.ஜெ.முகுந்தன் அவர்கள் தலைமையில் நாளை 14.06.2016 நடைபெற உள்ளது. சங்கராபுரம் குறுவட்டத்தைச் சேர்ந்த மூக்கனூர், உலகுடையாம்பட்டு, சிவபுரம், சௌந்திரவள்ளிபாளையம், ஊராங்கணி, தியாகராஜபுரம், பூட்டை, செம்பராம்பபட்டு, பொய்க்குணம், அரசம்பட்டு, கொசப்பாடி, வடசிறுவள்ளூர் ஆகிய கிராமங்கள்.

அந்தந்த வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்குறிப்பிட்ட கிராமங்களுக்கு வருவாய் தீர்வாயம் நடைபெற உள்ளது. அந்தந்த குறுவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளை மனுவாக அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.